**தெஹியோவிட்ட பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 யூலை 08 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 28 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தெஹியோவிட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) இலங்கை வங்கியில் உள்ள நிலையான வைப்புகள் இரண்டினது மீளாய்வாண்டு வட்டி வருவாய் ரூபா 156,691 ஆகும். இது ரூபா 65,000 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டுப் பெறுமதி ரூபா 156,691 மற்றும் மீளாய்வாண்டினது மிகை ரூபா 91,691 எனக் குறைவாக நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான சரியான மிகை ரூபா 12,284,526 ஆகும். எனினும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 12,473,922 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய ஊழியர் கடனான ரூபா 191,926 மற்றும் முன்னரே பெறப்பட்ட ஊழியர் கடனான ரூபா 3,500 என்பன கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட தீர்வை வரி ஆகிய ரூபா 234,405 நாட்குறிப்பு இலக்கம் 11 மூலம் பிடி ஆணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணக் கட்டணத்தில் செலவு வைக்கப்பட்டமையால், தீர்வை வரி வருவாய் ரூபா 234,405 குறைத்தும் பிடி ஆணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் அதேயளவு அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தீர்வை வரி வருவாய் ரூபா 115,060 மற்றும் முன்னரே பெறப்பட்ட தீர்வை வரி வருவாய் ஆகிய ரூபா 240,247 என்பன குறைத்துக் கணக்கிலிடப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 125,187 அதிகரித்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருவாய்க் கடன்பட்டோரது பெறுமதி ரூபா 115,060 மற்றும் முன்னரே பெறப்பட்ட வருவாயாகிய ரூபா 240,247 என்பன குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) நிகர சொத்து மாற்றக் கூற்றில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சரியான மீதி ரூபா 451,145,535 ஆனபோதும், அது ரூபா 836,045,986 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகர சொத்துக்களது பெறுமதி ரூபா 384,900,451 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கீட்டு விடய மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 7,741,071 ஆகும். அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 7,488,622 ஆகியமையால் ரூபா 252,449 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கற் கணக்கு

2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வரும் தொங்கற் கணக்கு செலவு மீதி ரூபா 45,552 ஆகும். இதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பொருட்டு 2010/11 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி வைப்புகள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, நிறுத்தி வைத்த வரி என்பவற்றின் கூட்டுத் தொகையான ரூபா 3,015,033 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு 2016 மே 31 வரை அனுப்பி வைக்கப்படாது கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 1989 மற்றும் 1992 ஆம் ஆண்டுகள் தொடக்கம் நிலுவையாக உள்ள கழிவுப் பொருள் வரி, சந்தையில் உள்ள கடைகளது வாடகை மற்றும் தண்டப் பணம், இறைச்சிக் கடை, மீன் கடை மற்றும் தண்டப் பண நிலுவைகளது கூட்டுத் தொகையான ரூபா 102,446 என்பவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பெற வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிக் கோவையின் 59 ஆம் விதி | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படும் வர்த்தகம், தொழில் துறை, வேலைகள் தொடர்பாகப் பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| i. | நி.பி 371 | 2011 முதல் 2015 வரை கொடுப்பனவு செய்யப்பட்ட 04 வேலை நிமித்தக் கட்டு நிதியான ரூபா 1,377,523 கூட்டுத் தொகையானது 2016 மே 31 வரை தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| ii. | நி.பி 396 | வழங்கப்பட்டு, 06 மாதங்களுக்குள் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 160,866 பெறுமதியான 10 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையினது தாபன விதிக் கோவையினது XXIV அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | சபையில் பணியாற்றி வேலை இடை நிறுத்தத்திற்குள்ளான மற்றும் இட மாற்றத்திற்குள்ளான 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 75,526 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஜுலை 20 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | உள்ளூராட்சிச் சபைகளால் ஆட்சேர்க்கப்படும் சமயாசமய, தற்காலிக, பிரதியீட்டு ஊழியர்கள் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யாமையால் 07 ஊழியர்களுக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 49,889 செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | சபரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளரது 2015 யூன் 01 ஆந் திகதிய 2005/4 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | காணிகளைத் துண்டுகளாக்கி விற்பனை செய்யும்போது, காணித் துண்டுகளது தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் 1 சதவீதத்தைப் பெற்று, பின்னர் விற்பனை செய்யப்படும் காணிகளது விற்பனைப் பெறுமதியின் 1 சதவீதம் வரியாக அறவிடப்படவேண்டும். எனினும், துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட 2 காணிகளின் தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் 1 சதவீதமான ரூபா 576,125 வரியாக அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 13,493,328 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,591,446 ஆகும். இதனால் மிளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளில் ரூபா 4,901,882 அதிகரிப்பு தென்படுகின்றது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

நிதிக் கூற்றுக்களின் ரூபா 4,901,882 அதிகரிப்பிற்கு 03 வருவாய் விடயங்களிலான அதிகரிப்பும் 05 செலவின விடயங்களிலான குறைவும் பிரதான காரணிகளாகின.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்**

(அ) செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| வருவாயினது தோற்றுவாய் | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 5,723,698 | 935,036 | 3,271,534 | 1,610,919 | 4,788,662 | 1,660,615 | 6,449,277 |
| குத்தகை வாடகை | 77,401 | - | 3,448,191 | 2,911,086 | 77,401 | 537,105 | 614,506 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 114,908 | - | 397,025 | 397,025 | 114,908 | - | 114,908 |
| பிற வருவாய் | 19,720,895 | 17,273,045 | 40,046,737 | 24,193,672 | 2,447,850 | 15,853,066 | 18,300,916 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட தீர்வை வரி வருவாயானது பட்டியலிடப்பட்ட வருவாயாகக் கருதப்பட்டு கணக்கிலிடப்பட்டதால், செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருவாய் நிலுவை அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக் கடன்பட்டோர் என்பவற்றுக்கிடையே ரூபா 58,388 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3.2 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டிய 02 தொழில்களுக்கு அனுமதிப் பத்திரம் பெறப்படாததால் சபை ரூபா 8,000 வருவாய் இழப்பிற்குள்ளானது.

**2.3.3 விளம்பரப் பலகைக் கட்டணம்**

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள 18 நிலையான பிரசார விளம்பரப் பலகைகளின் மூலம் ஒரு சதுர அடிக்கு ரூபா 50 வீதம் ரூபா 22,100 அறவிடப்படவில்லை.

**2.3.4 வியாபார வரி**

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் நிறுவப்பட்டுள்ளள 4 தொலை பேசிக் கம்பனிகளுக்குச் சொந்தமான 7 தொலை பேசிக் கோபுரங்கள் மூலம் வியாபார வரியாக ரூபா 21,000 அறவிடப்படவில்லை.

(ஆ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கி வரும் வர்த்தக மற்றும் விற்பனை தளங்கள் மற்றும் தொழில்கள் என்பவற்றிற்குக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின்போது 36 வர்த்தக, விற்பனைத் தளங்களிலிருந்து ரூபா 18,000 வியாபார வரியாக அறவிடப்படவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருவாறு.

| | | ரூபா |
|---|---|---|
| i. | நீதிமன்றத் தண்டப் பணம் | 7,697,925 |
| ii. | முத்திரைக் கட்டண வருவாய் | 8,154,878 |

**2.3.6 மீன் கடை வரி**

தல்துாவ வாரச் சந்தை வளவின் முன்னே உள்ள இடத்தில் 09 அத்துமீறிய நடமாடும் மீன் கடைகள் மற்றும் சந்தை வளவினுள்ளே நிரந்தரமாகவே அமைந்துள்ள 02 அத்துமீறிய மீன் விற்பனைக் கடைகள் காரணமாக சபைக்குச் சொந்தமான தல்துாவ வாரச் சந்தையில் உள்ள மீன் விற்பனைக் கடையில் மீன் விற்பனையாகாது அங்குள்ள முதலாவது கேள்வியாளரால் மாதாந்தக் கேள்வித் தொகையாகிய ரூபா 17,583 செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2013 மார்ச் மாதத்தில் மீன் கடையைச் சபை சுவீகரித்திருந்ததுடன், அதற்கமைய 09 மாதங்களுக்கான ரூபா 158,247 சபைக்குக் கிடைக்காது போனது.

**2.3.7 செய்முறைக் கட்டணம்**

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 04 தொலை பேசிக் கம்பனிகளுக்குச் சொந்தமாக நிறுவப்பட்டிருந்த 5 தொலை பேசிக் கோபுரங்களின் செய்முறைக் கட்டணமாகிய ரூபா 116,000 அறவிடப்படவில்லை.

**2.3.8 இயந்திர வாடகை**

(அ) 2014 ஆம் ஆண்டின்போது JCB இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 38.7 இயந்திர மணித்தியால வேலைக்கு ரூபா 96,750 அறவிடப்பட்டிருக்க வேண்டுமாயினும், ரூபா 41,760 மாத்திரமே அறவிடப்பட்டதால் ரூபா 54,990 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) JCB இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதன் பின்னர் காலதாமதமின்றி கட்டணத்தை அறவிட வேண்டுமாயினும், 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளில் 12 நாட்களுக்கு 54.9 இயந்திர மணித்தியாலங்களுக்கான கட்டணத்தை அறவிடுகையில் 10 நாட்கள் தொடக்கம் 03 மாதங்கள் வரையிலான தாமதம் ஏற்பட்டிருந்தது.

(இ) JCB இயந்திரத்தை வாடகைக்கு வழங்குவதற்கு முன்னர் குறித்த நபர்களிடமிருந்து வைப்புப் பணத்தைப் பெறவேண்டுமாயினும், 2014 ஆம் ஆண்டில் 08 நாட்களின்போது 244 இயந்திர மணித்தியாலங்களுக்கான வைப்புப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) ஒப்பந்த உடன்படிக்கைப் பிரகாரம் சபைக்குச் சொந்தமான JCB இயந்திர இயக்குநரின் நாளாந்த சராசரிப் பணிக்குரிய நேரம் 09 மணித்தியாலங்கள் ஆகும். எனினும், 2014 சனவரி முதல் டிசெம்பர் வரை சராசரிச் சேவைக் காலமான 09 மணித்தியாலங்களுக்குக் குறைவாகப் பணியாற்றிய 199 நாட்களின்போது ஒரு இயந்திர மணித்தியாலத்திற்கு ரூபா 200 வீதப்படி 1021 இயந்திர மணித்தியாலங்களுக்கு இயந்திர இயக்குநருக்கு ரூபா 204,200 படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஜூன் முதல் 2014 டிசெம்பர் வரையிலான காலப்பகுதியின்போது ஒரு இயந்திர மணித்தியாலத்திற்கு ரூபா 200 வீதப்படி 2076.2 இயந்திர மணித்தியாலங்களுக்குது JCB இயந்திர இயக்குநருக்குப் படியாக ரூபா 415,240 வழங்கப்பட்டிருந்தது. இக்காலப்பகுதிக்கென 534 நாட்களுக்கு நாளாந்தச் சம்பளமாக ரூபா 488,418 வழங்கப்பட்டுமிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சபைக்குச் சொந்தமான ZA-0126 எனும் இலக்கமுடைய JCB இயந்திரத்தின் வருவாய் ரூபா 1,573,320 ஆகும். அதன் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,114,306 ஆகும். இதனால் சபையின் நிதியத்திற்கு ஏற்பட்ட செயற்பாட்டு நட்டம் ரூபா 2,540,986 ஆகும்.

(ஆ) சபரகமுவ மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளரிடமிருந்து சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 9,912,220 பெறுமதியான 07 வாகனங்களது உரித்தைச் சபை சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.3. சொத்து முகாமைத்துவம்

#### பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான 2 கெப் வண்டிகள், ஒரு டிறெக்டர் மற்றும் வீதியை அழுத்துவதற்கான உருளை என்பன முறையே 2015, 2010, 2014 ஆம் ஆண்டுகள் தொடக்கம் செயற்பாடற்று பழைய சபை வளாகத்தில் இருந்தன.

### 3.4 கழிவுப் பொருட்களை அகற்றுதல்

சபை திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்தை அமுல்படுத்தாதுடன் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் தல்துாவ சந்தை வளவில் குழிகளைத் தோண்டி, முறையற்றவாறு அகற்றப்பட்டுமிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட 07 செலவின விடயங்களுக்கான ரூபா 1,418,000 கூட்டுத் தொகை நிதியின் 100 சதவீதமும் 07 செலவின விடயங்களுக்கான ரூபா 1,946,296 கூட்டுத் தொகை நிதியின் 56 சதவீதத்திற்கும் 96 சதவீதத்திற்குமிடையேயான ரூபா 3,364,246 கூட்டுத் தொகை சபை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்து முகாமைத்துவம்
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு